**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் :SC.No. 416/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரித்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமுத்தேவர் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | குறுங்காவனம் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 15.07.2026.

**(1, 2, 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் குறுங்காவனத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 05.07.2023ம் தேதி, 15.15 மணிக்கு ஆசாத்நகர் விலக்கு பக்கம் வைத்து எதிரி முப்பிலிமாடன் என்பவரை என் முன்பும், முத்துராஜ் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முத்துராஜ் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 15:22:07 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் :SC.No. 416/2024**</u>

<u>**வழக்கு சாட்சி PW-6**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தொழில் | : | டீ மாஸ்டர் |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 15.07.2026.

**(1, 2, 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடையில் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் பைக்கில் பெட்ரோல் போடச் சென்றபோது, குளத்துக்கரை பக்கம் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியல் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 02.07.2023ம் தேதி, 08.00 மணிக்கு குளத்துக்கரை பக்கம் வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர், அன்றைய தினம் 09.30 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து உடைந்த பிளாஸ்டிக் சேர்துண்டுகள், எரிந்தும் எரியாத நிலையிலுள்ள கொல்லிக்கட்டைகள் ஆகியவற்றை போலீசார் அத்தாட்சி கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், முருகன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 15:22:16 +0530